கொண்டிருக்கக்கூடிய நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நல்லாட்சியிலே, (மேசையைத் தட்டும் ஒலி) குறைந்தபட்சம் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலாவது 500 ஆதி திராவிட குடும்பங்கள் வாழும் பகுதிகளிலே இந்தச் சமூகக் கூடங்களைக் கட்டாயம் உருவாக்கினால், அவர்களுடைய தேவை நிவர்த்தியாகும். அதேநேரத்தில் அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று திருமண நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்கிறபோது, வருகிற சச்சரவுகளும், சமூக மாறுபாடுகளும் குறையும். ஆகவே, அதை ஒரு மரபாக, முன்னுரிமையாக வருங்காலங்களிலே உருவாக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து இம்மாதிரியான கோரிக்கைகள் அரசுக்கு நிறைய வந்து கொண்டிருக்கின்றன. இப்பொருள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

மணிமண்டபம்

***42350—திரு. கடம்பூர் ராஜு :**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 14]

கோவில்பட்டி தொகுதி, காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கோவில்பட்டி தொகுதி, காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைத்தல் தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளும் தகுதி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவருக்கே உண்டு என்பதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மண்ணில் எவருக்கும் இல்லை அவை; இவையைக் காத்து நிற்கின்ற காவல் தெய்வம் அம்மா அவர்களின் அவையே தமிழகத்தில் என்றென்றும் உண்டு என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பை தமிழக வாக்காளர்கள் வழங்கி, 37 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், 217 சட்டமன்றத் தொகுதிகளில் மகத்தான வெற்றியையும் அளித்து அம்மா அவர்களுக்கு மகுடம் சூட்டினார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களின் பேரவை, எதிரிகளுக்கு சுனாமியாக மாறி, எதிர்க் கட்சியை Zero ஆக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சவால் விட்ட எதிர்க்கட்சிக்குச் சமாதி கட்டி, உதிரிகளை ஒன்றும் இல்லாமல் ஆக்கி, கழகத்தைப் பெயருக்கேற்ப அகில இந்திய அளவில் மூன்றாவது பெரிய சக்தியாக மாற்றிக் காட்டிய வெற்றித் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் பொற்கால முதல்வர், இந்தியாவின் இமயம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

வாழ்ந்து மறைந்த வரலாற்றுத் தலைவர்களுக்கு மணிமண்டபங்கள், நினைவுத் தூண்கள், அரசு விழாக்கள் என்று

பெருமை சேர்த்து வாழவைக்கும் வள்ளல், வாழ்கின்ற வரலாற்றுத் தலைவி எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன்.

தமிழ்த் தொண்டாற்றி, தமிழின் புகழை உலகெங்கும் அறியச் செய்திட்ட வீரமாமுனிவர் அவர்கள் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய, புனித பரலோக மாதா ஆலயம் அமைந்துள்ள காமநாயக்கன்பட்டியில் அவருக்கு திருவுருவச் சிலையும், மணிமண்டபமும் அமைக்க வேண்டுமென்று தென் மாவட்டங்களில் அதிகமாக வாழும் கத்தோலிக்க கிறித்துவர்களும், தமிழ் சான்றோர்களும் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்துக்கொண்டு வருகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை மாநகரில், மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு 1968 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் திங்கள் 8 ஆம் நாளன்று அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் புகைப்படம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தப்படுகிறது. நம் தாய்த் திருநாட்டை தலை நிமிரச் செய்திட, தமிழகத்தின் தியாகச் செம்மல்களைப் பெருமைப்படுத்திட, அவர்களது புகழ் என்றென்றும் நிலைத்திட, நினைவு மண்டபங்களும், நினைவுச் சின்னங்களும் அமைத்து கௌரவப்படுத்துவதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகராக இவ்வுலகில் எவரையும் எடுத்துச்சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு கயத்தாறில் மணிமண்டபம் அமைக்க

வேண்டுமென்ற கோரிக்கையை இந்தச் சபையிலே சென்ற கூட்டத் தொடரில் வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரிசீலனை செய்து பைத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று 9-4-2013 அன்று சட்டமன்றப் பேரவையில் உடனடியாக அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக, பைத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் அமைத்திட ரூ.1.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவில்பட்டி தொகுதி, காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைத்தல் தொடர்பான மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரில் முதல் சுதந்திரப் போராட்ட வீரன், மாவீரன் கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை அறிவித்ததோடு, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியை உடனடியாக ஒதுக்கீடு செய்து, கட்டடப் பணிகளை நிறைவேற்றி, விரைவில் திறக்க இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு இந்த நல்ல நேரத்திலே நன்றிதனை உரித்தாக்கிக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு மணிமண்டபம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.